# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 16 | 4 Pages | 17.08.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 16 | 4 பக்கங்கள் | 17.08.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மனைவியுடன் ஹவாய் தீவு செல்கிறார் ஜோ பைடன்: தீ விபத்து சேதம் குறித்து ஆய்வு



அமெரிக்கா, ஆக. 17

அமெரிக்காவின்ஹவாயில்உள்ளதீவுக்கூட்டங்களில்2வதுமிகப்பெரிய தீவு மவுய். இந்த தீவில் கடந்த சில தினங்களுக்கு முன் காட்டுத்தீ ஏற்பட்டது. காட்டுத்தீயை கட்டுக்குள் கொண்டு வர அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டு வந்த நிலையில், காற்று வேகமாக வீசியதால் காட்டுத்தீ கட்டுக்குள்வராமல்நகரக்குள்பரவியது. இதனால்90க்கும்மேற்பட்டோர் தீயில்கருகிஉயிரிழந்தனர். 1000க்கும்மேற்பட்டோர்மாயமாகியுள்ளனர். இந்த காட்டுத்தீயால் மவுய் தீவு கடும் சேதம் அடைந்துள்ளது. ஒரு நகரமே தீக்கிரையாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் நானும் எனது மனைவியும் (ஜில் பைடன்) ஹவாய் செல்ல இருக்கிறோம். அங்கு செல்லும் நாங்கள் மவுய் காட்டுத்தீ குறித்து ஆய்வு செய்ய இருக்கிறோம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அங்கு செல்ல இருக்கும் ஜோ பைடன் எங்களால் மீட்புப்பணி, சுத்தப்படுத்தும் பணிக்கு தடை ஏற்படுத்த விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா ஹவாய் தீவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என கவர்னர் ஜோஷ் கிரீனிடம் ஜோ பைடன் உறுதியளித்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவித்த ஜோ பைடன், ஹவாய் மக்களுக்கு தேவைப்படும் ஒவ்வொன்றும், அவர்களுக்கு சென்றடையும் என்றார். ஜோ பைடன் சூறாவளி, புயல் போன்ற இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று ஆய்வு செய்துள்ளார். ஆனால், ஒஹியோவில் ரெயில் கவிழ்ந்து நச்சு ரசாயனம் வெளியேறியது. அந்த இடத்திற்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளவில்லை. மவுய் தீவில் காட்டுத்தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து அதிகாரிகள் இன்னும முழுயாக கண்டறியவில்லை. விசாரணை நடத்தி வருகிறார்கள். பழமையான லஹைனாவில் ஏற்பட்ட தீ 85 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சொல்லாட்சியை தாண்டி எப்போது செய்வீர்கள்: இந்தியா சீனா பேச்சுவார்த்தை குறித்து காங்கிரஸ் விமர்சனம்



சீனா, ஆக. 17

இந்தியா சீனா இடையில் எல்லைக் கட்டுப்பாடு கோடு (LAC) தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது. கடந்த 2020ம் ஆண்டு இந்திய எல்லைக்குள் சீன ராணுவம் ஊடுருவியது. கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இருநாட்டு ராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அப்போது இந்திய ராணுவ வீரர்கள் 30க்கும் மேற்பட்டோர் வீரமரணம் அடைந்தனர். இதனால் போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. பின்னர், பேச்சுவார்த்தைக்குப்பின் பதற்றம் தணிந்தது. இந்த சம்பவத்தின்போது சீனராணுவம் இந்தியாவில் பலமைல்தூரம் நுழைந்து ஆக்கிரமித்ததாக தகவல் வெளியானது. இதுகுறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிய நிலையில், இந்தியாவின்நிலத்தை யாரும் ஆக்கிரமிக்க முடியாது என மோடி அரசு தெரிவித்தது. எல்லைக் கட்டுப்பாடு கோடு தொடர்பாக இந்தியா சீனா இடையே பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. என்றாலும், இந்தியப் பகுதியில் இருந்து சீனா வெளியேறவில்லை. இந்த நிலையில்தான் கடந்த இரண்டு நாட்களாக இந்தியா சீனா ராணுவ கமாண்டர்கள் அளவிலான 19வது கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது இந்திய எல்லை கட்டுப்பாடு கோட்டை தவிர்த்து மற்ற பிரச்சினைகளை தீர்க்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. ஆனால், சீனா ஆக்கிரமிப்பு செய்த பகுதியில் இருந்து வெளியேறுவது குறித்து எந்த முன்னேற்றமும் இல்லை. இருதரப்பு பேச்சுவார்தை நேர்மறையாக, ஆக்கப்பூர்வமாக, ஆழமானதாக அமைந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 19வது கட்ட பேச்சுவார்த்தையும்தோல்வி.பாரதமாதாவைபாதுகாக்கசொல்லாட்சியை தாண்டி எப்போது முன்னோக்கி பயணிப்பீர்கள் என காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் சுர்ஜிவாலா கூறுகையில் ''கடந்த 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில இருந்து தற்போது மூன்று வருடங்கள், மூன்று மாதங்கள் ஆகியும் முந்தைய நிலை திரும்பவில்லை. டெப்சாங் பகுதியில் இந்தியப் படைகள் 65 பாதுகாப்பு பாயிண்ட்களில் 26ல் பாதுகாப்பை தொடர் முடியாது. சீனா, இந்தியாவில் உள்ள ஒய் ஜங்சன் என அழைக்கப்படும் பாட்டல்நெக்கில் இந்திய ராணுவத்தை தடுக்கிறது. சீன ராணுவம் வெட்கமின்றி ஆக்கிரமித்த நமது பகுதியில் இருந்து, எப்போது வெளியேற்றப்படுவார்கள்? 2020 ஏப்ரல் மாதத்திற்கு முந்தைய நிலை எப்போது உருவாகும். அனைத்துக்கட்சி கூட்டத்தின்போது, இந்திய எல்லைக்குள் யாரும் நுழையவில்லை என்று மோடி கடந்த 2020ம் ஆண்டு ஜூன் 20ந்தேதி தெரிவித்தாரே, அதே நிலையில் இருக்கிறாரா? அல்லது நாட்டை தவறாக வழி நடத்தினாரா? சீனா இந்திய எல்லையை ஆக்கிரமிக்கவில்லை என்றால், ஏன் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறீர்கள். பாரத மாதாவை பாதுகாக்க சொல்லாட்சியை தாண்டி எப்போது முன்னோக்கி பயணிப்பீர்கள். எல்லையில் எப்போது முந்தைய நிலை திரும்பும். இவ்வாறு சுர்ஜேவாலா தெரிவித்துள்ளார்.

# "மதி சந்தை" இணைய வழி விற்பனை தளம் உருவாக்கப்படும்: முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 17

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான மூன்றாவது மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (திஷா) கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: எந்த திட்டமாக இருந்தாலும், அதனைக் கண்காணித்துக்கொண்டே இருந்தால் தான் அது தொய்வில்லாமல் தொடரும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் வேளாண்மைஉழவர் நலத்துறை ஆகிய நான்கு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து இன்று ஆய்வு செய்கிறோம். உங்களிடம் முழுமையான புள்ளிவிபரங்கள் இருக்கும். இருப்பினும், சில முக்கியத் தகவல்களை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 20232024ம் ஆண்டில் புதியதாக 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ள்ளது. அவற்றுக்குச் சுழல் நிதியாக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 5 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 75 கோடி ரூபாயும், 3 ஆயிரம் கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்களுக்கு வறுமை நிலை குறைப்பு நிதியாக 7.50 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 10 ஆயிரம் புதிய சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கவும், 2023, 24ம் ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, பல்வேறு புதிய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




குறிப்பாக, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 'மதி சந்தை' என்ற இணைய வழி விற்பனை தளம் உருவாக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன்,சுயஉதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை அவர்களுக்குள்ளாகவும், பிற பெரும் வணிகநிறுவனங்கள்மூலமாகவும் விற்பனை செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் வாங்குவோர் விற்போர் சந்திப்பு நடத்தப்படும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் முக்கிய சுற்றுலாத் தளங்களில் 'மதி அங்காடிகள்' நிறுவப்படுவதுடன், சிறப்பு சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்' வழங்கப்படவுள்ளன. மேலும் சுய உதவிக் குழுக்களால் இயக்கப்படும் 'மதி திணை உணவகங்கள்', ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளன.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நடப்பாண்டில் விரிவாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன சுய உதவிக் குழு உறுப்பினர்களைப் பயிற்றுவித்து, அவர்களின் பங்கேற்பின் மூலம், தமிழ்நாட்டில் அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும். "நன்றே செய்அதையும் இன்றே செய்" என்ற வகையில் எல்லாருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களை சிறிதும் தாமதமின்றி செயல்படுத்தி, திட்டங்களின் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைய துறைத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் முழுமனதுடன்செயல்படவேண்டும். இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள உறுப்பினர்கள், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் தங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என். நேரு, இ.பெரியசாமி, எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், உதயநிதி ஸ்டாலின், மா. சுப்பிரமணியன், எம்.பி.க்கள் எஸ்.எஸ். பழனி மாணிக்கம், ஆ. ராசா, சு.திருநாவுக்கரசர், தொல். திருமாவளவன், கே.நவாஸ்கனி, எம்.எல்.ஏ.க்கள் வி.ஜி.ராஜேந்திரன், டாக்டர் நா. எழிலன், ஜே.எம்.எச். அசன் மவுலானா, கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில்குமார், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வளர்ச்சி திட்டங்கள் குறித்து முதலமைச்சர் ஆய்வு: எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களும் பங்கேற்பு

சென்னை, ஆக. 17

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

தமிழகத்தில் மத்திய அரசின் பங்களிப்புடன் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிக்க மாநில அளவில் வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (திசா குழு) ஏற்படுத்தப்பட்டது.

இந்த குழுவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, பாராளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், பி.ஆர்.நடராஜன், திருநாவுக்கரசர், திருமாவளவன், நவாஸ்கனி, ஆர்.எஸ்.பாரதி, ஏ.நவநீதகிருஷ்ணன் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், டாக்டர் எழிலன், டி.கே.ஜி.நீலமேகம், பூமிநாதன், அசன் மவுலானா, ஆகியோரும், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர், அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் துறை வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர்

கூட்டத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம், ஜல் ஜீவன் திட்டம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைவருக்கும் கல்வித் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் அமைச்சர்கள், எம்.பி.க்கள்,எம்.எல்.ஏ.க்கள்,தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்ளிட்ட அரசு துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# புத்தகம் எழுதி சாதனை படைத்த மாணவிக்கு முன்னாள் எம்.எல்.ஏ. வாழ்த்து

திருப்பூர், ஆக. 17

ஆரிகமி மாடலில் 2 மணி நேரத்தில் 326 மாடல்களின் டிசைன் செய்து உலக சாதனை படைத்துள்ளார். தனக்கு கிடைக்கும் வருவாயை அரசு மருத்துவமனையில் அமைய உள்ள புற்றுநோய் மையத்திற்கு வழங்க உள்ளேன்.

திருப்பூர் கே. செட்டிபாளையம் சி.டி. சி. காலனி பகுதியை சேர்ந்தவர் பிரபாகர். இவரது மகள் ஹேம அக்ஷயா. இவர் திருப்பூர் கோவில் வழியில் உள்ள பிரண்ட்லைன் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வருகிறார். இந்த மாணவி படிக்கும் போதே தனது சொந்த முயற்சியின் மூலம் "லில் லியர்ன்ஸ்" என்ற புத்தகம் ஒன்று எழுதினார். அதனை கடந்த 29ந் தேதி சாகித்ய அகடாமி விருதுபெற்றஓய்வுபெற்றஐ.ஏ.எஸ், அதிகாரி ராஜேந்திரன் வெளியிட்டார் . இந்த புத்தகத்தில் குழந்தைகளுக்கான சிறுகதைகள் மற்றும் விழிப்புணர்வு கதைகள் இடம் பெற்றுள்ளன. அதேபோல் மாணவி ஹேம அக்ஷயா பல்வேறு சாதனைகளும் படைத்துள்ளார் .



அதன்படி இளம் எழுத்தாளர் அக்ஷயா எலைட் விருது, ஏசியன் விருது, தமிழன் ரெக்கார்டர், இந்தியன் ரெக்கார்டர் மற்றும் ஆரிகமி மாடலில் 2 மணி நேரத்தில் 326 மாடல்களின் டிசைன் செய்து உலக சாதனையும் படைத்துள்ளார். இந்த உலக சாதனை விருதுகளை சப் கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் வழங்கினார். இந்த நிலையில் தான் பெற்ற சாதனை சான்றிதழ்கள் மற்றும் மெடல்கள் , புத்தகம் ஆகியவற்றை திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி முன்னாள் எம்எல்ஏ., சு.குணசேகரனிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார். அப்போது முன்னாள் எம்.எல்.ஏ., குணசேகரன் மாணவிக்கு சால்வை அணிவித்து மேலும் பல்வேறு சாதனைகள் படைக்க வாழ்த்து தெரிவித்தார். அதேபோல் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோருக்கும் வாழ்த்து தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, தென்னம்பாளையம் தொகுதி கழகச் செயலாளர் கே.பி.ஜி.மகேஷ்ராம், நிர்வாகி ஆண்டவர் பழனிச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவிக்கு வாழ்த்து தெரிவித்தனர். தொடர்ந்து மாணவி ஹேம அக்ஷயா கூறுகையில், சிறு வயது முதல் புத்தகம் எழுத வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதன்படி எனது பெற்றோர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உதவியுடன் இந்த புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளேன். புத்தகங்களை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாய் அனைத்தும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் அமைய உள்ள புற்றுநோய் மையத்திற்கு வழங்க உள்ளேன். தொடர்ந்து பெற்றோர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உதவியுடன் பல்வேறு சாதனைகளை வரும் காலங்களில் நிகழ்த்துவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

# பெரியாறு அணையில் 2வது சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த கோரிய வழக்கு: மதுரை ஐகோர்ட் அதிரடி

மதுரை, ஆக.17

மதுரை சர்வேயர் காலனியைச் சேர்ந்த சுந்தர்ராஜன் மற்றும் கனக சபாபதி ஆகியோர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது: பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு கொள்ளளவை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் எனவும், அணையை ஒட்டியுள்ள பேபி அணையை பலப்படுத்திய பின்னர், முழு கொள்ளளவான 152 அடி வரை நீரை தேக்கிக்கொள்ளலாம் எனவும் கடந்த 2014ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து அப்போதில் இருந்து பெரியாறு அணையில் 142 அடிக்கும் அதிகமான அளவில் சேரும் தண்ணீரை 13 ஷட்டர்கள் வழியாக கேரளா கடல் பகுதிக்கு திறக்கப்பட்டு வீணாகிறது. தமிழகப் பகுதிக்கு தேக்கடி ஷட்டரில் இருந்து சுரங்கப் பாதை வழியாக அதிகபட்சமாக வினாடிக்கு 2,500 கனஅடி நீர் மட்டுமே திறக்க முடியும். இதைவிட கூடுதலாக இந்த வழியாக தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை. மேலும்ஒருசுரங்கப்பாதை அமைத்து தமிழகத்திற்கு கூடுதலாகதண்ணீர்திறந்து விடப்பட்டால், 142 அடிக்கும் அதிகமாக உள்ள தண்ணீர் வீணாக கேரள பகுதியில் வெளியேற்ற வேண்டிய அவசியம் இருக்காது. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் லோயர் கேம்பில் இருந்து ராமநாதபுரம் மாவட்டம் வரை 259 கிலோ மீட்டர் தூரத்திற்கு விவசாயம், குடிநீருக்கு பற்றாக்குறை ஏற்படாது. எனவே முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் பெறும் வகையில் 2வது சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர். இந்த வழக்கு பல்வேறு கட்டங்களாக விசாரணைக்கு வந்த பிறகு, தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த வழக்கில் இன்று நீதிபதிகள் சுந்தர், பரத சக்கரவர்த்தி அமர்வு தீர்ப்பு வழங்கியது. அதில், இரு மாநிலங்களுக்கும் இடையேயான பிரச்சனை என்றால், அது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் தான் வழக்கு தொடர்ந்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்று பல்வேறு உத்தரவுகளில் சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் இந்த வழக்கை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். மனுதாரர்கள் தங்களது முறையீடு குறித்து சுப்ரீம் கோர்ட்டை அணுகலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



# நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. சார்பில் உண்ணாவிரத போராட்டம்

சென்னை, ஆக. 17

சென்னை கவர்னர் மாளிகையில் நடைபெற்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய கவர்னர் ஆர்.என். ரவி, நீட் விலக்கு மசோதாவில் எந்த காலத்திலும் நான் கையெழுத்து போடமாட்டேன். நீட் தேர்வுக்கு விலக்கு அளிப்பது மாணவர்களின் போட்டி போடும் திறனை கேள்விக்குறியாக்கிவிடும். நீட் தேர்வுக்கு பயிற்சி மையங்களுக்கு சென்று படிக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று பேசியிருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. கவர்னரின் பேச்சுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், கவர்னரையும் கண்டித்து தி.மு.க. சார்பில் வரும் 20ந்தேதி போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் வரும் 20ந்தேதி தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெறுகிறது. இதுதொடர்பாக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நீட் தேர்வு, தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்து, அவர்களை மட்டுமன்றி அவர்தம் பெற்றோரையும் மரணத்தை நோக்கி தள்ளுகிறது.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும் எனக்கென்ன என்றிருக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்ட் 20 அன்று மாபெரும் உண்ணாவிரத அறப்போரை நடத்தவுள்ளோம். தமிழ்நாட்டின் கல்வி உரிமையையும் நம் மாணவர்கள் பெற்றோர்களின் உயிரை காக்கவும் இந்த உண்ணாவிரத அறப்போரில் திரளாக பங்கேற்போம். நீட்டை ஒழிப்போம் என கூறியுள்ளார்.



# சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் 4 பேருக்கு விருது

சூளகிரி, ஆக. 17

மாவட்ட கலெக்டர் சரயு சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றி வரும் 4 பேருக்கு விருது வழங்கினார். விமல் ரவிக்குமார் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜேம்ஸ் , ஆனந்த குமார்,ஜெயம்மா ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகாவில் சுதந்திர தின விழாவையொட்டி மாவட்ட கலெக்டர் சரயு சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றி வரும் 4 பேருக்கு விருது வழங்கினார். விருதானது வட்டார வளர்ச்சிஅலுவலர் (கி.ஊ) விமல் ரவிக்குமார் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜேம்ஸ் , ஆனந்த குமார்,ஜெயம்மா ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், அலுவலர்கள் ஊழியர்கள் மற்றும் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.




# அரசு பஸ் கவிழ்ந்து விபத்து

சூளகிரி, ஆக. 17

ஏரிகரை–யோரத்தில் உள்ள பள்ளத்தில் திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் கவிழ்ந்து விபத்துக்–குள்ளானது. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து காயமடைந்த 5 பேரை உத்தனப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலைத்திற்கு சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

தருமபுரி புறநகர் பஸ் நிலையத்தில் இருந்து இன்று காலை 67 பயணிகளை ஏற்றிக்கொண்டு பெங்களூருவுக்கு அரசு பஸ் ஒன்று புறப்பட்டது. அந்த பஸ்சை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த டிரைவர் ஜெயவேல் (வயது47) என்பவர் ஓட்டி சென்றார். பஸ்சில் தருமபுரியைச் சேர்ந்த கண்டக்டர் ஜெயராமன் (57) என்பவர் உடன் சென்றார். அந்த பஸ் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியை அடுத்த உத்தனப்பள்ளி வழியாக இன்று காலை சென்றது. அப்போது அந்த பஸ் நாழிக்கல் அருகே வந்த போது பின்னால் வந்த தனியார் கல்லூரி பஸ் ஹாரன் அடித்தபடியே வந்தது. உடனே அரசு பஸ் டிரைவர் ஜெயவேல் பஸ்சை ஓரமாக ஓட்டி சென்று பின்னால் வந்த கல்லூரி பஸ்சிற்கு வழி விட்டார். அப்போது அப்பகுதியில் ஏரிகரை–யோரத்தில் உள்ள பள்ளத்தில் திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் கவிழ்ந்து விபத்துக்–குள்ளானது. இதில் பஸ்சில் இருந்த பயணிகள் அய்யோ, அம்மா என்று அலறினர். அவரது அலறல் சத்தம் கேட்டு முன்னால் சென்ற கல்லூரி வாகனத்தில் இருந்த டிரைவர் மற்றும் மாணவர்கள், அந்த வழியாக சென்றவர்கள் ஆகியோர் திரண்டு வந்து பஸ்சில் இருந்து பயணிகளை பத்திரமாக மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் டிரைவர் ஜெயவேல், கண்டக்டர் ஜெயராமன் உள்பட 5 பேருக்கு காயம் ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து தகவலறிந்த உத்தனப்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து காயமடைந்த 5 பேரை உத்தனப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலைத்திற்கு சிகிச்சைக்காக அனுமதித்தனர். பஸ்சில் இருந்த மற்ற பயணிகளை மீட்டு மாற்று பஸ்சில் போலீசார் ஏற்றி விட்டனர். இதைத்தொடர்ந்து பஸ்சை மீட்கும் பணியிலும் போலீசார் ஈடுபட்டனர் சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசா–ரணை நடத்தி வருகின்றனர். விபத்து நடந்த இடத்தில் அருகே ஏரி உள்ளது. அந்த ஏரி தற்போது தண்ணீரின்றி வறண்டு காணப்படுவதால், பள்ளம் மிகுந்த அந்த ஏரியில் அரசு பஸ் அடுத்தடுத்து உருண்டு கவிழ்ந்து இருந்தால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும், அதிர்ஷ்ட–வசமாக பஸ் ஏரிகரை–யோரத்தில் மட்டும் கவிழ்ந்ததால் பயணிகளின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் சிறு,சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். இந்த சம்பவத்தால், அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# ஆடி அமாவாசையையொட்டி அமராவதி ஆற்றில் பக்தர்கள் குவிந்தனர்

தாராபுரம், ஆக. 17

ஆடி மாதம் முதல் மார்கழி வரை உள்ள காலம் தட்சிணாயனம். முன்னோர்கள் ஆடி மாதம் முதல் தேதியன்று பித்ரு லோகத்தில் இருந்து பூமிக்கு வரத் தொடங்குகின்றனர்.

ஆடி அமாவாசையை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம் தாராபுரம், உடுமலை அமராவதி ஆற்றில் பொதுமக்கள் புனித நீராடி தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். வாழை இலையில் அரிசி மாவால் பிண்டம்பிடித்து, வாழைப் பழம், வெற்றிலை, ஊதுபத்தி ஆகியவற்றை படைத்து சிறப்பு வழிபாடு நடத்தினர். பின்னர் அந்த பிண்டத்தை ஆற்றில் கரைத்து வழிபாடு செய்தனர். ஆடி மாதம் முதல் மார்கழி வரை உள்ள காலம் தட்சிணாயனம். அதாவது சூரியன் தெற்கு நோக்கி நகரத் தொடங்கும் காலம். இது ஆடி மாதத்தில் தொடங்குகிறது. தட்சிணாயனம் தேவர்களுக்கு இரவுப்பொழுது. எனவே, இந்த காலத்தில் நம்மை பாதுகாக்கவும், நமக்கு அனைத்து நன்மைகளையும் தந்து ஆசீர்வதிக்கவும் நம்முடைய முன்னோர்கள் ஆடி மாதம் முதல் தேதியன்று பித்ரு லோகத்தில் இருந்து பூமிக்கு வரத் தொடங்குகின்றனர். கருட புராணத்தில் இந்த பித்ரு லோகம் சூரிய மண்டலத்தில் இருந்து பல லட்சம் மைல்கள் தொலைவில் இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. பித்ரு லோகத்தில் இருந்து புறப்படும் அவர்களை வரவேற்கும் விதமாக, ஆடி மாத அமாவாசை தினத்தில் அவர்களுக்கு நாம்தர்ப்பணம்கொடுத்து, அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும் என புரோகிதர்கள் தெரிவித்தனர். தாராபுரம் அமராவதி ஆற்றில் குறைந்த அளவிலேயே தண்ணீர் இருந்ததால் சில இடங்களில் தேங்கி நின்ற தண்ணீரில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். இதேப்போல் உடுமலை அமராவதி ஆற்றங்கரை மற்றும் திருமூர்த்திமலை பாலாற்றங்கரையில் பக்தர்கள் புனிதநீராடினர்.



# 2வது ஆடி அமாவாசையை முன்னிட்டு ஒகேனக்கல்லில் குவிந்த மக்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்

ஒகேனக்கல், ஆக. 17

பூஜை செய்த பொருட்களை காவிரி ஆற்றில் விட்டனர். பின்னர் அவர்கள் காவிரி ஆற்றில் புனித நீராடி அங்குள்ள காவிரி அம்மனை வழிபட்டனர். ஒகேனக்கல்லில் நேற்று தர்ப்பணம் கொடுக்க ஏராளமானோர் திரண்டதால் முதலைப்பண்ணை பகுதியில் கூட்டம் அலைமோதியது.

ஆடி அமாவாசை, புரட்டாசி அமாவாசை மற்றும் தை அமாவாசை நாட்களில் காவிரியில் புனித நீராடி முன்னோர்களுக்கு திதி மற்றும் தர்ப்பணம் கொடுத்தால் குடும்பத்தில் வளம் செழிக்கும் என்பது ஐதீகம். இதனால் அமாவாசை நாட்களில் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் ஏராளமானோர் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பது வழக்கம். இந்த வருடம் ஆடி மாதத்தில் 2 முறை அமாவாசை தினம் வந்தது. இதில் கடந்த மாதம் 17ந் தேதியன்று அமாவாசை தினத்தில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதை விட இன்று ஆடி அமாவாசை தினத்தில் தர்ப்பணம் கொடுப்பது சிறந்தது என பக்தர்கள் கருதுகின்றனர். இதைத் தொடர்ந்து 2வது ஆடி அமாவாசையான இன்று ஒகேனக்கல்லில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். முதலைப்பண்ணை பகுதியில் காவிரி கரையில் ஏராளமான பொதுமக்கள் வாழை இலை, பச்சரிசி, தேங்காய், பழம், காய்கறி, மளிகை பொருட்கள் உள்ளிட்டவற்றை வைத்து பூஜைகள் செய்து முன்னோர்களை நினைத்து வழிபட்டனர். பூஜை செய்த பொருட்களை காவிரி ஆற்றில் விட்டனர். பின்னர் அவர்கள் காவிரி ஆற்றில் புனித நீராடி அங்குள்ள காவிரி அம்மனை வழிபட்டனர்.

இதில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், வேலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்கள், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களை சேர்ந்தவர்கள் என ஏராளமானவர்கள் ஒகேனக்கல்லுக்கு வந்து தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். ஒகேனக்கல்லில் நேற்று தர்ப்பணம் கொடுக்க ஏராளமானோர் திரண்டதால் முதலைப்பண்ணை பகுதியில் கூட்டம் அலைமோதியது. இதனால் அசம்பாவித சம்பவங்கள் நடக்காமல் இருக்க போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

மேலும், சுற்றுலா பயணிகள் காவிரி ஆற்றில் ஆழமான பகுதிக்கு சென்றுவிடாமல் இருக்க போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில் காவிரி ஆற்றில் நீர்வரத்து மாலை வினாடிக்கு 5000 கனஅடியாக இருந்த தண்ணீர் அளவு நேற்று வினாடிக்கு 8,000 கன அடியாக சற்று அதிகரித்து வந்தது. இன்றும் அதே அளவில் தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், மெயினருவி, சினிபால்ஸ் ஆகிய அருவிகளில் தண்ணீர் சீராக பாய்ந்து வருகிறது. அதில் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்தனர். ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால், பஸ் நிலையம், கடைவீதி ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டன. அதிக பஸ்கள் இயக்க வேண்டும் ஒகேனக்கல்லுக்கு விடுமுறை நாட்கள் மட்டுமே கூட்டம் அதிகளவில் வரும், இதைத்தவிர வருடத்தில் ஆடி, புரட்டாசி, தை ஆகிய மாதங்களில் வரும் அமாவாசை தினத்தன்று தர்ப்பணம் கொடுப்பதற்காகவே அதிகளவில் கூட்டம் வருவதால், சேலம், கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் தருமபுரிக்கு, தருமபுரியில் இருந்து ஒகேனக்கல்லுக்கும் செல்லக்கூடிய பஸ்கள் அதிகளவில் இயக்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஈரோடு மாநகராட்சி பகுதியில் 2 நாட்களில் 10 பாம்புகள் பிடிப்பட்டன

ஈரோடு , ஆக. 17

குடியிருப்புகளில் வீடுகளில் 2 சாரைப்பாம்புகளை பிடித்தார். பாம்புகளையும் வனத்துறையினர் மூலம் அடர்ந்த வனப்பகுதியில்பத்திரமாககொண்டு விட்டார்.

ஈரோடு மாநகராட்சி உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கடந்த சில நாட்களாக பாம்புகள் படையெடுப்பது தொடர் கதையாகி வருகிறது. ஈரோடு ரங்கம் பாளையம் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அருகே பழைய பொருட்கள் வைக்க ப்பட்டிருந்த பகுதியில் சுமார் 8 அடி நீளம் உள்ள சார பாம்பு இருந்ததை பாம்பு பிடி வீரர் யுவராஜ் பிடித்தார். இதேபோல் ஈரோடு ரெயில்வே காலனி பகுதியில்உள்ளகுடியிருப்புகளில் 2 வீடுகளில் 8 முதல் 10 அடி உயரம் உள்ள 2 சாரைப்பாம்புகளை அவர் பிடித்தார். ஈரோடு இந்தியன் நகர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் பாம்பு புகுந்ததாக அவருக்கு தகவல் கிடைத்தது. அதன் பெயரில் யுவராஜ் சென்று பாம்பை தேடி தேடினார். அப்போது அங்கு டி.வி.யில் சாரைப்பாம்பு ஒளிந்து கொண்டிருப்பதை கண்டு பிடித்தார். இவ்வாறாக ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கடந்த 2 நாட்களில் 10க்கும் மேற்பட்ட பாம்புகளைஅவர்பிடித்துள்ளார். பின்னர் அனைத்து பாம்புகளையும் வனத்துறையினர் மூலம் அடர்ந்த வனப்பகுதியில் பத்திரமாக கொண்டு விட்டார். தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் குளிர்ச்சியான இடங்களை நோக்கி பாம்புகள் வருவதால் வீடுகளை நோக்கி வருகிறது என்றும், பொதுமக்கள் ப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், காலனி வைக்கும் இடம், பழைய பொருட்கள் வைக்கும் இடத்தை கவனமாக கையாள வேண்டும் என்றும் அவர் கூறினார்.





திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், அமரபூண்டி ஊராட்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# குடிநீர் திட்ட பணிகளை நிறுத்த வலியுறுத்தல்



நொய்யல், ஆக. 17

என்.புகளூர் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் தவுட்டுபாளையம் குடிநீர் திட்ட பணிகளை நிறுத்த வலியுறுத்தப்பட்டு உள்ளது அனைத்து கிணறுகளும் வறண்டு விட்டதாக குற்றச்சாட்டு

என்.புகளூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் மதிவாணன் தலைமை வைத்தார்.நன்செய் புகழூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தொட்டுப்பாளையம் காவிரி ஆற்றில் புதியதாக அமைக்கப்பட்டுவரும் குடிநீர் திட்டத்திற்கு எதிராக நன்செய் புகளூர், தவிட்டுப்பாளையம், கட்டிப்பாளையம், அஹ்ரகாரம், புகழூர் கஸ்பா, மோதுகாடு ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக இந்த குடிநீர் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தீர்மானத்தின் நகல்கள் கரூர் வட்டார வளர்ச்சி அலுவலர்,( வெண்ணெமலை) மாவட்ட ஆட்சித்தலைவர், வருவாய் கோட்டாட்சியர் ( கரூர்) ,வருவாய் வட்டாட்சியர்( புகழூர்) ஊராட்சி மன்ற தலைவர் (நன்செய் புகளூர்). காவல் ஆய்வாளர்( வேலாயுதம்பாளையம்) அனுப்பி வைக்கப்பட்டது. நன்செய் புகழூர் பகுதியில் அனைத்து கிணறுகளும், ஆழ்துளை கிணறுகளும். சுத்தமாக வறண்டுவிட்டதால் பொதுமக்கள் இந்த முடிவினை எடுத்துள்ளதாக பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். இதனால் அந்த கிராம சபை கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.கிராமசபை கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகள், ஊராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், செவிலியர்கள், வேளாண் துறை அதிகாரிகள், கால்நடைத் துறை மருத்துவர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் பள்ளி விடுதி மூடப்பட்டதால் கலெக்டர் அலுவலகத்தில் முற்றுகை



திண்டுக்கல், ஆக. 17

விடுதி மாணவர்களிடம் தினசரி பள்ளிக்கு வந்து செல்ல வேண்டும் எனவும், இல்லையெனில் வெளியிடத்தில் இருந்து தங்கி பள்ளிக்கு வருமாறும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனால் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இன்று மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் முற்றுகையிட்டு மனு அளித்தனர்.

திண்டுக்கல் நகர் பகுதியில் அரசு உதவிபெறும் இருபாலர் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். இதில் 80க்கும் மேற்பட்டோர் தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பள்ளங்கி, தோணிமலை, ஆடலூர், திருப்பூர், கோவை, செந்துறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விடுதியில் தங்கி படித்து வருகின்றனர். நடப்பு கல்வியாண்டில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் விடுதி செயல்பட்டு வந்தது. ஆகஸ்டு மாதம் முதல் விடுதியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை வெளியேற்றும் முயற்சியில் பள்ளி நிர்வாகம் இறங்கியது. தினசரி பள்ளிக்கு வந்து செல்ல வேண்டும் எனவும், இல்லையெனில் வெளியிடத்தில் இருந்து தங்கி பள்ளிக்கு வருமாறும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனால் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இன்று மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் முற்றுகையிட்டு மனு அளித்தனர். அவர்கள் தெரிவிக்கையில், நடப்பு கல்வியாண்டில் அரையாண்டு தேர்வு நெருங்கி வரும் நிலையில் திடீரென விடுதியை விட்டு வெளியேறுமாறு கூறினால் எங்களது கல்வி தடைபடும். எனவே தேர்வு முடியும் வரை எங்கள் கல்வியை தொடர நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்தனர். திடீரென பள்ளி மாணவர்கள் பெற்றோருடன் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

# பரலோக அன்னை ஆலய தேர் பவனி



சாயல்குடி, ஆக. 17

பரலோக அன்னை ஆலய தேர் பவனி நடந்தது. இதற்கான ஏற்பாடுகளை விழா கமிட்டியாளர்கள், கிராம மக்கள் செய்திருந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே உள்ள நரிப்பையூர் பெரியநாயகிபுரம் கிராமத்தில் பரலோக அன்னை ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் தேர் பவனி நடந்தது. பங்கு தந்தை அருள்ஜோதி மைக்கேல் தலைமை வகித்தார். கடந்த 6ந்தேதி கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. தினமும் அன்னைக்கு ஜெப நிகழ்ச்சி, திருப்பலி நடந்தது. நிறைவு நாளில் தேர் பவனி நடந்தது. திரளான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை விழா கமிட்டியாளர்கள், கிராம மக்கள் செய்திருந்தனர்.

# பள்ளிக்கு கல்வி சீர்வரிசை



திருச்சுழி, ஆக. 17

மானூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு கல்வி சீர்வரிசை வழங்கப்பட்டது. முடிவில் பட்டதாரி ஆசிரியர் நீராத்தி லிங்கம் நன்றி கூறினார்.

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி மானூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியை ஜெகதா தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் மங்களம் முன்னிலை வகித்தார். முன்னாள் மாணவமாணவிகள் சார்பில் பள்ளிக்கு கல்வி சீர்வரிசை வழங்கப்பட்டது. விழாவில் மாணவ மாணவிகளின் ஒயிலாட்டம், கோலாட்டம் மேளதாள நிகழ்ச்சிகள் நடந்தது. முடிவில் பட்டதாரி ஆசிரியர் நீராத்திலிங்கம் நன்றி கூறினார்.

# ஆழ்வார்திருநகரி, குரங்கணி கோவில்களில் சமபந்தி பொதுவிருந்து



தென்திருப்பேரை, ஆக. 17

குரங்கணி முத்துமாலை அம்மன் கோவிலில் சமபந்தி பொதுவிருந்து, மதியம் அம்மனுக்கு தீபாராதனை சிறப்பு வழிபாடு நடைபெற்றது இதில் குரங்கணி ஊராட்சி தலைவர் ஜெயமுருகன் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலில் சிறப்பு வழிபாடு மற்றும் சமபந்தி பொதுவிருந்து நடைபெற்றது. ஆழ்வார்திருநகரி பேரூராட்சி தலைவர் சாரதா பொன் இசக்கி, துணைத் தலைவர் சுந்தர்ராஜ் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள், பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் அஜீத் மற்றும் பணியாளர்கள் செய்து இருந்தனர். அதே போன்று குரங்கணி முத்துமாலை அம்மன் கோவிலில் சமபந்தி பொதுவிருந்து, மதியம் அம்மனுக்கு தீபாராதனை சிறப்பு வழிபாடு நடைபெற்றது. குரங்கணி ஊராட்சி தலைவர் ஜெயமுருகன் மற்றும் பக்தர்கள், ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பணியாளர்கள் செய்து இருந்தனர்.

# ரூ.68 லட்சத்திற்கு தேங்காய் பருப்பு விற்பனை

வெள்ளகோவில், ஆக. 17

வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பும் வியாழனன்று சூரியகாந்தி விதையும் ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு வாணியம்பாடி, மூலனூர், கரூர், ஸ்ரீரங்கம், திருச்சி பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்பு மற்றும் சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். நேற்று செவ்வாய்கிழமை 131 விவசாயிகள் கலந்து கொண்டு 94 ஆயிரத்து 245 கிலோ தேங்காய் பருப்பு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், வெள்ளகோவில், காங்கேயம், முத்தூர், ஊத்துக்குளி பகுதியைச் சேர்ந்த 12 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக ரூ. 78.75 க்கும், குறைந்தபட்சம் ரூ.58.85க்கும் கொள்முதல் செய்தனர். நேற்று மொத்தம் ரூ.68லட்சத்து 26ஆயிரத்து 45க்கு வணிகம் நடைபெற்றது. இத்தகவலை வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சி. மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

# தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்திய செங்கமலம் யானை



திருவாரூர், ஆக. 17

கோவில் அறங்காவலர் குழு தலைவர் இளவரசன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தேசியக்கொடிக்கு செங்கமலம் யானை மரியாதை செலுத்தியது.

மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவிலில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கோவில் அறங்காவலர் குழு தலைவர் இளவரசன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். அப்போது அங்கு பாகனுடன் ராஜ கோபாலசாமி கோவில் யானை செங்கமலம் வந்தது. தொடர்ந்து யானை செங்கமலம் தனது துதிக்கையை தூக்கி தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தியது.

பாப் கட்டிங் செங்கமலம் என பக்தர்களால் அழைக்கப்பட்டு புகழ் பெற்ற செங்கமலம் யானை தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தியது கண்கொள்ளாக்காட்சியாக இருந்ததாக பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

# அவினாசி கோவில் கோபுர தேன் கூடு அழிப்பு



அவினாசி, ஆக. 17

ராஜகோபுர பராமரிப்பு பணிகள் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. புகை மருந்து அடித்து தேன்பூச்சிகளை அழித்து தேன் கூட்டை அப்புறப்படுத்தினர்.

திருப்பூர் மாவட்டம் அவினாசியில் கொங்கு ஏழு சிவாலயங்களில் முதன்மை பெற்றதாக கருணாம்பிகை உடனமர் அவினாசிலிங்கேசுவார் கோவில் உள்ளது. இந்த கோவில் கும்பாபிஷேகம் நடத்த பராமரிப்பு பணிகள் தொடங்கியுள்ள நிலையில், ஏழு நிலைராஜகோபுரத்தின் உச்சியில் பெரிய அளவில் தேன் கூடு இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் ராஜகோபுர பராமரிப்பு பணிகள் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. எனவே கோவில் நிர்வாகத்தின் மூலம் தேன் கூட்டை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி பொள்ளாச்சியிலிருந்து 5 நபர்கள் குழுவினர் வந்தனர். அவர்கள் புகை மருந்து அடித்து தேன்பூச்சிகளை அழித்து தேன் கூட்டை அப்புறப்படுத்தி அதிலிருந்த தேனை எடுத்து சேமித்தனர்.இதையடுத்து ராஜகோபுர பராமரிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# அவினாசி தூய்மைப்பணியாளர்களுக்கு பரிசு



அவினாசி, ஆக. 17

காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பேரூராட்சி மன்ற அலுவலகத்தில் சிறப்பாக பணியாற்றிய தூய்மைபணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு அவினாசி பேரூராட்சி மன்ற அலுவலகத்தில் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதையடுத்து பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி தேசிய கொடியேற்றிவைத்தார். இதையடுத்து பேரூராட்சி மன்ற அலுவலகத்தில் சிறப்பாக பணியாற்றிய தூய்மைபணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் செயல் அலுவலர் ராமலிங்கம், துணைத்தலைவர் மோகன், வார்டு உறுப்பினர்கள், துப்புரவு ஆய்வாளர் கருப்புசாமி, பேரூராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# கோரையாற்றை ஆக்கிரமித்துள்ள ஆகாய தாமரைகள் அகற்றப்படுமா?



திருவாரூர், ஆக. 17

உப்பூர் பகுதியில் உள்ள கோரையாற்றில் ஆகாய தாமரை செடிகள் மண்டி கிடக்கிறது. வயல்களில் தண்ணீர் செல்ல முடியாமல் நெற்பயிர்கள் கருகி வருகின்றன.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையை சுற்றி உள்ள கிராமங்களில் காணப்படும் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவது கோரையாறு ஆகும். இந்த ஆற்றை நம்பி தில்லைவிளாகம், உதயமார்த்தாண்டபுரம், இடும்பாவனம், ஆலங்காடு, உப்பூர், ஜாம்பவானோடை, எடையூர், தோலி போன்ற பல கிராமங்கள் உள்ளன.

இந்த நிலையில் உப்பூர் பகுதியில் உள்ள கோரையாற்றில் ஆகாய தாமரை செடிகள் மண்டி கிடக்கிறது. ஆற்றில் உள்ள தண்ணீர் தெரியாத படி ஆகாய தாமரை செடிகள் ஆக்கிரமித்துள்ளன.

இதனால் ஆற்றில் இருந்து வயல்களில் தண்ணீர் செல்ல முடியாமல் நெற்பயிர்கள் கருகி வருகின்றன. மழை காலங்களில் வயல்களில் உள்ள மழைநீர் வடிய வைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. மேலும் ஆகாய தாமரை செடிகளால் மழை காலங்களில் தண்ணீர் செல்ல முடியாமல் கிராமங்களுக்குள் புகுந்து விடுகிறது.

ஆகாயத்தாமரை செடிகள் ஆக்கிரமித்துள்ளதால் கோரையாற்றில் பொது மக்கள் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோரையாற்றில் ஆக்கிரமித்துள்ள ஆகாயத்தாமரை செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிராம சபைக் கூட்டங்களில் திட்டங்கள் குறித்த தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்: விழுப்புரம் கலெக்டர் பேச்சு



விழுப்புரம், ஆக. 17

பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்த்தல், கிராமத்தில் போதைப்பொருள் பயன்பாட்டினை தவிர்த்தல் ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சியில், நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பழனி சிறப்பு விருந்தினராக பங்கேற்று, ஊராட்சியில் நடைபெற்று வரும் திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொது மக்களுடன் இன்று கலந்துரையாடினார். இதில் கலெக்டர் பேசியதாவது: ஊராட்சி பகுதிகளில் பணிகள் நடைபெறும் பொழுது பொது மக்கள் பார்வையிட்டு, தங்கள் ஊராட்சிக்கு தேவையானதிட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்தி பயன்படுத்திக் கொள்ள வேண்டும், குறிப்பாக, கிராம சபைக் கூட்டத்தின் போது, பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்த்தல், கிராமத்தில் போதைப் பொருள் பயன்பாட்டினை தவிர்த்தல், திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதை தவிர்த்து கழிப்பறையினை பயன்படுத்துதல், ஊராட்சி யினை தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் போன்ற உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கூடுதல் கலெக்டர் சித்ரா விஜயன், உதவி இயக்குநர் பொன்னம்பலம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஜீலியட் மேரி விக்டர், முகையூர்ஊராட்சி மன்ற தலைவர் லூயிஸ், வட்டார வளர்ச்சி அலுவலர் நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பந்தல் விழுந்து மாணவி காயம்

கடத்தூர், ஆக. 17

பந்தல்விழுந்தவிபத்தில் 3 வகுப்பு படிக்கும் ரக்ஷா என்ற குழந்தையின் தலைமீது இரும்பு பைப் விழுந்தது. குழந்தையை மீட்டு கடத்தூரில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு தையல் போடப்பட்டது.

தருமபுரி மாவட்டம், கடத்தூர் அருகே உள்ள திண்டாலனூர் பொம்மிடி ரோட்டில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியின் போது பந்தல் விழுந்த விபத்தில் 3 வகுப்பு படிக்கும் ரக்ஷா என்ற குழந்தையின் தலைமீது இரும்பு பைப் விழுந்தது. இதில் மண்டையில் ரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் சிந்திய நிலையில் குழந்தையை மீட்டு கடத்தூரில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு தையல் போடப்பட்டது. பின்பு தருமபுரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கபட்டு அங்கு அவர் சிகிச்சைபெற்றுவருகிறார். சுதந்திர தினவிழாவில் நடந்த இந்த சம்பவம் அதிர்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

# குழந்தைகளுடன் சுதந்திர தினத்தை கொண்டாடிய விஷால்



நடிகர் விஷால் இயக்குனர் ஹரி இயக்கத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

செல்லமே படத்தின் மூலம் திரையுலகிற்கு கதாநாயகனாக அறிமுகமானவர் விஷால். அதன்பின்னர் சண்டக்கோழி, திமிரு, சத்யம், அவன் இவன், தாமிரபரணி, துப்பறிவாளன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வருகிறார். இவர் நடித்துள்ள 'மார்க் ஆண்டனி' திரைப்படம் செப்டம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. தொடர்ந்து விஷாலின் 34வது படத்தை இயக்குனர் ஹரி இயக்குகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நடிகர் விஷால், சுதந்திர தினத்தை காரைக்குடியில் உள்ள பள்ளி குழந்தைகளுடன் கொண்டாடியுள்ளார். இதை தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள அவர் இது தொடர்பான புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.

# ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கு.. கேட்டாலே அதிரும் பார் உனக்கு புதிய சாதனை படைத்த லியோ பாடல்



விஜய் நடித்து வரும் திரைப்படம் 'லியோ'. நடிகர் அர்ஜுன் கதாபாத்திரத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ நேற்று வெளியானது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாகநடைபெற்றுவருகிறது. இதையடுத்து 'லியோ' படத்தில்நடித்துள்ள நடிகர் அர்ஜுன் கதாபாத்திரத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ நேற்று வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, 'லியோ' படத்தின் முதல் பாடலான 'நா ரெடி' பாடல் யூ டியூபில் 10 கோடி பார்வைகளை கடந்துள்ளது. இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.



# சாதியை வலியுறுத்தி படங்கள் எடுக்கப்படுவதில்லை வைரமுத்து கருத்து

கவிஞர் வைரமுத்து பல படங்களுக்கு பாடல் எழுதி வருகிறார். இவர் அடித்தட்டு மக்களின் மனதில் சாதி என்ற பாகுபாடுகளை விதைக்க கூடாது என்று கூறினார்.

திரையுலகில் தன் பாடல் வரிகளால் பலர் மனதில் இடம் பிடித்த கவிஞர் வைரமுத்து ரஜினி, கமல், பிரசாந்த், அஜித், விஜய், சூர்யா, தனுஷ் என முன்னணி நடிகர்கள் பலரின் படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார். இவர் முதல் மரியாதை, ரோஜா, கருத்தம்மா, பவித்ரா, சங்கமம், கண்ணத்தில் முத்தமிட்டால், தென்மேற்குபருவக்காற்று, தர்மதுரை உள்ளிட்ட படங்களுக்காக சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை பெற்றார். தற்போது வைரமுத்து பல படங்களுக்கு பாடல் எழுதி வருகிறார். சென்னை பெசன்ட் நகரில் கவிஞர் வைரமுத்து செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: நாட்டில் நடந்துக் கொண்டிருக்கும் சம்பவங்களை கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். பிஞ்சு மனங்களில் நஞ்சு கலக்க கூடாது, அடித்தட்டு மக்களின்மனதில்சாதி என்றபாகுபாடுகளைவிதைக்க கூடாது. கல்விக் கூடங்கள் சாதிகளை ஒழிக்க பிறந்த மன மருத்துவ நிலையங்கள், அந்த நிலையங்களிலேயே சாதி தலை தூக்குவதை நாம் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. சாதி என்பதை ஒரு அடையாளம் என்ற அளவில் மட்டும் கருதினால் போதும், அதற்கு மேல் பெருமையோ இழிவோ கொடுக்க வேண்டாம். சாதி என்ற மாய பிம்பத்தை கடந்து கல்வி, அறிவு, பகுத்தறிவு மற்றும் சமவாய்ப்பு தளங்களில் முன்னேற வேண்டும் என்பதை என் கோரிக்கையாக வைக்கிறேன் என்று கூறினார். மேலும், திரைப்படங்கள் சாதியை வலியுறுத்துவதற்காக எடுக்கப்படுவது இல்லை, ஏனென்றால் ஒரு சாதியை வலியுறுத்தி எடுக்கும் படம் வணிக ரீதியாக வெற்றி பெறுவதில்லை. குறிப்பிட்ட சாதியைகுறித்துஎடுக்கப்படும்படம்அந்தகுறிப்பிட்ட சாதி மக்கள் எண்ணிக்கையில் நின்று போகும். அதனால் ஒரு திரைப்படத்தை தயாரிக்கிறவர்கள், நடிப்பவர்கள், இயக்குபவர்கள்யாரும்ஒருகுறிப்பிட்ட சாதி படத்திற்காக தன்னை அர்ப்பணிப்பது இல்லை. ஆனால், அந்த குறிப்பிட்ட சமூகத்தின் சம்பவங்களை மட்டும் அவர்கள் மையப்படுத்துகிறார்கள் என்றால் சாதி அங்கு தலைதூக்காது" என்று பேசினார்.

# பிரசித்தி பெற்ற கோவில்களில் வழிபாடு செய்த பிரபலங்கள்



ராமேஸ்வரம் கடலில் லட்சக்கணக்கானோர் கடலில் தர்ப்பணம் செய்தனர். 22 தீர்த்தங்கள் உள்ளடங்கிய தீர்த்தத்தை இளையராஜா தலையில் தெளித்து புனித நீராடினார்.

ஆடி அமாவாசையை யொட்டி ஏராளமா னோர் தங்களது முன்னோர்கள் நினைவாக கடல் மற்றும் கோவில் குளங்களில் தர்ப்பணம் செய்தனர். ராமேஸ்வரம் கடலில் இருந்தே லட்சக்கணக்கானோர் கடலில் தர்ப்பணம் செய்தனர். இந்த நிலையில் இசையமைப்பாளர் இளையராஜா ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலுக்கு வந்து தரிசனம் செய்தார். தொடர்ந்து கோவிலில் உள்ள 22 தீர்த்தங்கள் உள்ளடங்கிய தீர்த்தத்தை இளையராஜா தலையில் தெளித்து புனித நீராடினார். அதன் பின்னர் சுவாமி பர்வதவர்தினி அம்மன் கோவிலில் நடந்த சிறப்பு பூஜையில் பங்கேற்றார். ஆடி அமாவாசையையொட்டி திருமழிசை அருகே உள்ள ஈஸ்வரன் கோவிலுக்கு இன்று காலை நடிகர் செந்தில் குடும்பத்துடன் சென்று தரிசனம் செய்தார். அங்குள்ள தெப்ப குளக்கரையில் முன்னோர்கள் நினைவாக தர்ப்பணம் செய்தார்.

# மும்பையில் செட்டிலாகிவிட்டேனா..? விளக்கமளித்த சூர்யா

சூர்யா 'கங்குவா' திரைப்படத்தில் நடித்து வருகிறார். சூர்யாவின் 43வது படத்தை சுதா கொங்கரா இயக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இயக்குனர் சிவா இயக்கத்தில் சூர்யா 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கும் இந்த படம் 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழிகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து சூர்யா நடிக்கும் 43வது படத்தைஇயக்குனர்சுதாகொங்கராஇயக்கவுள்ளதாககூறப்படுகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் மாதம் தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் நடிகர் சூர்யா ரசிகர்களை சந்தித்தார். அப்போது நீங்கள் மும்பையில் செட்டிலாகிவிட்டீர்களா? என்று ரசிகர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, தனது மகள் தியா, மகன் தேவ் இருவரும் மும்பையில் படித்து வருகின்றனர். அதனால் அவர்களைப் பார்க்க அடிக்கடி அங்கு சென்றுவருகிறேன். மற்றபடி நான் சென்னையில்தான் இருக்கிறேன். மும்பையில் செட்டிலாகவில்லை என்று தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.



# உலக கோப்பை கிரிக்கெட்: இந்தியாபாகிஸ்தான் போட்டிக்காக நட்சத்திர ஓட்டல்கள் நிரம்பின



13வது உலககோப்பைகிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அக்டோபர் 5ந்தேதி முதல் நவம்பர் 19ந்தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடக்கிறது. இதில் போட்டியை நடத்தும் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை, நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. அகமதாபாத்தில் நடைபெறும் உலக கோப்பை போட்டியின் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்துநியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்திய அணி முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை அக்டோபர் 8ந்தேதி சென்னையில் சந்திக்கிறது. இந்தியாபாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் அகமதாபாத்தில் அக்டோபர் 14ந்தேதி நடக்கிறது. உலக கோப்பை போட்டிக்கான டிக்கெட் விற்பனை வருகிற 25ந்தேதி தொடங்குகிறது. இந்தியாஅல்லாதபோட்டிகளுக்குடிக்கெட்டுகள்அன்றுவிற்பனையாகிறது. இந்திய அணி முதல் 3 ஆட்டத்தில் மோதும் போட்டிக்களுக்கான டிக்கெட்டுகள் (சென்னை, டெல்லி, புனே) வருகிற 31ந்தேதி விற்பனையாகிறது.

இந்தியாபாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக்கான டிக்கெட் விற்பனை செப்டம்பர் 3ந்தேதி விற்பனையாகிறது. ஆன்லைன் மூலம் டிக்கெட்டுகள் விற்பனையாகிறது. டிக்கெட் பெறுவதற்கான முன்பதிவு நேற்று தொடங்கியது. ரசிகர்கள் உலக கோப்பை கிரிக்கெட் இணையதளத்தில் தங்கள் பெயரை முன்பதிவு செய்துக் கொண்டால் அவர்களுக்கு டிக்கெட் விற்பனை தொடர்பான தகவல்கள் முதலில் தெரிவிக்கப்படும். அவர்களுக்கு டிக்கெட் கிடைக்க இது கூடுதல் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியாபாகிஸ்தான் போட்டிக்காக அகமதாபாத்தில் உள்ள நட்சத்திர ஓட்டல்கள் முழுவதும் நிரம்பியுள்ளன. 3 முதல் 5 நட்சத்திர ஓட்டல்களுக்கான முன்பதிவு புக்கிங் முற்றிலும் முடிவடைந்து உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அகமதாபாத்தில் உள்ள ஒரு 5 நட்சத்திர டீலக்ஸ் ஓட்டலில் சுமார் 180 அறைகள் உள்ளன. அவை கிட்டத்தட்ட முழுமையாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஓட்டல்களில் ஒருநாள் வாடகை ரூ.20 ஆயிரம் முதல் ரூ.2½ லட்சம் வரை கட்டணமாக நிர்ணயி க்கப்பட்டுள்ளது. அதி நவீன வசதிகள் கொண்ட ஓட்டல் அறையின் ஒருநாள் கட்டணம் ரூ.1 லட்சம் முதல் ரூ.2½ லட்சமாக இருக்கிறது.

இதேபோல அகமதாபாத் செல்வதற்கான விமான கட்டணமும் கடுமையாக உயர்ந்து உள்ளது. அக்டோபர் 13 முதல் 15 வரை மும்பை, டெல்லியில் இருந்து அகமதாபாத் செல்லும் பெரும்பாலான விமானங்களின் கட்டணம் ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரத்தை எட்டியுள்ளது. இது மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண நாட்களில் ரூ.2500 முதல் ரூ.5 ஆயிரம் வரை தான் கட்டணமாகும். உலக கோப்பை போட்டி காரணமாக 5 மடங்கு அதிகரித்துள்ளது. அகமதாபாத் நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் 1 லட்சத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் அமரலாம். இந்தியாபாகிஸ்தான் போட்டிக்காக 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரசிகர்கள் வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து குஜராத் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சூதாட்ட புகாரில் சிக்கிய இலங்கை வீரர் செனனாயகே வெளிநாடு செல்ல தடை

செனனாயகே கடந்த 2020ம்ஆண்டு இலங்கை பிரிமீயர் லீக்கில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. 3மாதம்வெளிநாடுசெல்லதடைவிதித்து உத்தரவிட்டு உள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் செனனாயகே. 38 வயதான இவர் 2012 முதல் 2016 வரையில் 49 ஒருநாள் போட்டி, ஒரு டெஸ்ட் மற்றும், 24 இருபது ஓவர் ஆட்டங்களில் விளையாடி உள்ளார். செனனாயகே கடந்த 2020ம்ஆண்டு இலங்கை பிரிமீயர் லீக்கில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில் இது தொடர்பான வழக்கை விசாரித்த கொழும்பு தலைமை மாஜிஸ்திரேட் கோர்ட்டு செனனாயகே 3 மாதம் வெளிநாடு செல்ல தடைவிதித்து உத்தரவிட்டு உள்ளது. இதுதொடர்பான உத்தரவை குடியேற்றம் மற்றும் குடியமர்வு பிரிவு பொதுக் கட்டுப்பாட்டாளர் துறைக்கு அனுப்பியுள்ளது. இந்த உத்தரவு கிடைத்து உள்ளதாக இலங்கை அட்டர்னி ஜெனரல் பிரிவு தெரிவித்துள்ளது. மேலும் செனனாயகே மீது சிறப்பு விசாரணைக்குழு அறிக்கையின் பேரில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்யுமாறு அட்டர்னி ஜெனரல்பிரிவுக்குஉத்தரவைகோர்ட்டுஅனுப்பியுள்ளது.





# அடுத்த இன்னிங்ஸ்க்கு ரெடி.. சர்வதேச கிரிக்கெட்டில் ஓய்வு அறிவித்த பாகிஸ்தான் வீரர்..!

சர்வதேச கிரிக்கெட்டில் இவர் 237 விக்கெட்களை வீழ்த்தி இருக்கிறார். இந்திய அணிக்கு எதிரான போட்டியில் இவர் 5 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வாஹப் ரியாஸ் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து இருக்கிறார். எனினும், உலகம்முழுக்கபிரான்சைஸ்கிரிக்கெட்டில்தொடர்ந்துவிளையாடவிரும்புவதாக அவர் தெரிவித்து இருக்கிறார். 38 வயதான இடது கை பந்துவீச்சாளரான வாஹப் ரியாஸ் கடைசியாக 2020 டிசம்பர் மாதம் பாகிஸ்தான் அணிக்காக களமிறங்கினார். இவர் 2011, 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் உலக கோப்பை தொடர்களில் விளையாடி இருக்கிறார். சர்வதேச கிரிக்கெட்டில் 27 டெஸ்ட் போட்டிகள், 91 ஒருநாள் போட்டிகள் மற்றும் 36 டி20 போட்டிகளில் சுமார் 237 விக்கெட்களை கைப்பற்றி இருக்கிறார். 2008ம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி மூலம் பாகிஸ்தான் அணியில் வாஹப் அறிமுகமானார். 2011 உலக கோப்பை தொடரின் போது இந்திய அணிக்கு எதிரான போட்டியில் வாஹப் ஐந்து விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். இதே போன்று 2015 உலக கோப்பை தொடரின் காலிறுதி போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக சிறப்பாக பந்துவீசி அசத்தினார். முன்னதாக 2019 வாக்கில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற வாஹப், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் கவனம் செலுத்தி வந்தார். அந்த வகையில், தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக வாஹப் அறிவித்து இருக்கிறார். "சர்வதேச கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணிக்காக களமிறங்கி விளையாடியது பெருமைக்குரிய விஷயம் ஆகும். இந்த பயணத்திற்கு முடிவு சொல்வதில் எனக்கு மகிழ்ச்சியாக உணர்கிறான். புதிய பயணத்தை துவங்கும் வகையில் பிரான்சைஸ் கிரிக்கெட்டில் விளையாட இருப்பதில் ஆவலோடு இருக்கிறேன். இதன் மூலம் தொடர்ந்து உலகளவில் சிறந்த வீரர்களுடன் விளையாடி ரசிகர்களை மகிழ்விப்பேன்," என்று வாஹப் ரியாஸ் தெரிவித்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.